# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

# 2024 – 2025ஆம் ஆண்டு

# மானியக் கோரிக்கை எண்.26

# மீதான என்னுடைய பதிலுரை

# முன்னுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

சமுத்திரத்தில் கப்பல் செலுத்தும்

மாலுமியின் சாகசத்தோடும்

ஒரு பட்டாளத்தையே வழிநடத்தும்

சேனைத் தலைவரின் சாமர்த்தியத்தோடும்

அவையை வழிநடத்துகிற பெருமகனே!

கனிவும் கண்டிப்பும்

உங்கள் இரு கை!

அதனால் தான் பெருமையடைகிறது

சபாநாயகர் இருக்கை!

தங்களுக்கு என்

வணக்கங்கள்!

**எங்கள் ஆருயிர் முதல்வர் அவர்களுக்கு**

**முதல் வணக்கம்**

தமிழகத்தின் தலைமகன்

வெற்றித் திருமகன்

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு

வணக்கங்கள்

இன்னா நாற்பதை வென்ற

இனியவை நாற்பது நீங்கள்!

நெற்றி வியர்வையை எல்லாம்

வெற்றி வியர்வையாக

சிந்துகிறவர் நீங்கள்!

தங்களுடைய

தேர்தல் பிரச்சாரம் மூலம்

தமிழகத்தையே வென்று வந்த

திராவிடச் சிங்கம் நீங்கள்!

சிறுபான்மையை இகழ்ந்தவர்களுக்கு

பெரும்பான்மையே கிடைக்காமல்

செய்தவர் நீங்கள்!

அரசியலமைப்புச் சட்டத்தையே

மாற்ற நினைத்தவர்களை

அதை வணங்க வைத்து

நாற்பத்தியோராவது வெற்றியையும்

பதிவு செய்தவர் நீங்கள்

நாற்பதை வென்றது
உங்கள் வியூகம்!
நானூறைத் தடுத்தது
உங்கள் மதியூகம்!

இந்தியாவைக் காக்க
இந்தியா கூட்டணியை உருவாக்கி–
மதவாதத்தை வலுவிழக்கச் செய்த
மிதவாதம் நீங்கள்!
நாட்டுக்கே
நம்பிக்'கை' தந்தவர் நீங்கள்!

தேர்தலில் எல்லோரையும்
புறங்காண வைக்கிறீர்கள்!
ஒருசிலர் தேர்தலை
புறக்கணிக்கவும் வைக்கிறீர்கள்!

உங்களால் தான்

இங்கே

மதவெறி பாசிசம் தோற்கிறது!

பெரியாரின்

மண்வாசம் பூக்கிறது!

# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களே

எங்கள் சின்னவரே !

வணக்கம்

அரசியல் மைதானத்தில்

கால்பந்துகளை எல்லாம்

Goal பந்துகளாக மாற்றத் தெரிந்தவரே!

பவுன்சர் பந்துகளை எல்லாம்

பவுண்டரிக்கு அப்பால் விளாசுகிறவரே!

இருவிழியில் எப்போதும்

சூரிய நெருப்பு!

இதயத்தில் எப்போதும்

கலைஞரின் இருப்பு!

இயக்கத்தில் எப்போதும்

தலைவரின் சுறுசுறுப்பு – உங்கள்

கண்ணசைவுக்குக் காத்திருக்கும்

இளைஞரின் துருப்பு –

நீங்கள் தான் கழகத்தின்

கருப்பு சிவப்பு!

தலைவர் எய்த ஏவுகணையாக

தமிழகம் முழுவதும்

களமாடி வந்தீர்கள்!

நாற்பது தொகுதி வெற்றிகளையும்

கைகளில் ஏந்தி வந்தீர்கள்

# 1. துறை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

ஆட்சி என்னும் மாளிகையை அழகாக எழுப்ப துறைகள் என்னும் தூண்களே முக்கிய காரணம். ஒவ்வொரு துறையின் வெற்றியே ஒட்டுமொத்த அரசின் வெற்றியாகும்.

நம் நூற்றாண்டு நாயகர் – ஐந்து முறை அரசாண்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **"மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்"** கடந்த 52 ஆண்டுகளாக சென்னை பெருநகர வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து வருகிறது.

அந்த தியாகத் தலைவரின் நினைவிடம் திறக்கப்பட்ட பின்பு,

நடைபெறுகிற முதல் சட்டப் பேரவை கூட்டம் இது.

இக்கூட்டத்தின் வாயிலாக

**பூக்கள் கோலமிடும்**

**கலைஞரின்**

**சலவைக்கல் சதுக்கத்தில்**

என் நன்றிகளை காணிக்கை ஆக்கி

எனது பதிலுரையை தொடங்குகிறேன்.

## 2. கணினி மயம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

***கடந்த காலத்தில் நடந்தவைகளை***

***நிகழ் காலத்தில்***

***பாடமாக்கிக் கொண்டால்***

***எதிர் காலத்தில் எச்சரிக்கையாக***

***இருக்க முடியும் என்பார்***

***முத்தமிழ் அறிஞர் கலைஞர்.***

காலத்திற்கேற்ற நடைமுறைகளை உருவாக்குவது மிக அவசியம் என்பதனால் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்

அனைத்துப் பணிகளும் இன்று கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

இதனால் இணையவழி மூலம் எளிதாக விண்ணப்பிக்கின்ற வசதியை மக்களுக்கு வழங்கி,

அன்றாட நடைமுறைகளில் விரைவான சேவையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

***இணையவழித் திட்ட அனுமதி!***

***அதுவே***

***நம் வளர்ச்சிக்கு கிடைத்த வெகுமதி!***

*என்பதற்கேற்ப,*

மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முற்றிலுமாக இணையவழித் திட்ட அனுமதி வழங்கப்பட்டு வருவதால் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன, திட்ட அனுமதிகளும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக, உயரமான கட்டட அனுமதிக்காக 2020 ஆம் ஆண்டு 90 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 48 விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டது.

கணினிமயமாக்கப்பட்ட பின் கடந்த ஆண்டு 135 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 102 விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த ஆண்டு மனைப்பிரிவுக்குத் திட்ட அனுமதி வழங்குவதும் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிக அளவில் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டு வருகிறது

கணினி மயமாக்கம் என்பது
எங்கள் செயல்களில் புதுவேகத்தையும்
செய்து முடிப்பதில்
உத்வேகத்தையும் தந்திருக்கிறது

## 3. வட சென்னை வளர்ச்சித் திட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**!

சென்னையின் சரிபாதியாக விளங்கும் வடசென்னை பகுதி பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாக உள்ளது.

தொழிற்சாலைகளும், தொழிற்சாலை சார்ந்த தொழிலாளர்களும் உடல் உழைப்பாளர்களும் நிறைந்த பகுதியாகும்.

மழை – என்றால் நனைந்து
வெயில் – என்றால் காய்ந்து
குளிர் – என்றால் நடுங்கி
வாழ்க்கையை நகர்த்துகிற
அடித்தட்டு மக்கள் நிறைந்த பகுதி

நாமெல்லாம் சாலைகளை பயணத்திற்காக பயன்படுத்தி வருகிறோம். அங்கே பலரும் சாலையோரங்களை தங்கள் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தி வருகிறார்கள்.

**ஏழையின் சிரிப்பில்**

**இறைவனை காண்போம்**

என்ற பேரறிஞர் அண்ணா

அவர்களின் சொல்லுக்கு ஏற்ப

நாளும் உழைப்பவர் நம் முதல்வர்

வடசென்னை மக்களின் வாழ்வாதாரம் மேம்பட நம் மாண்புமிகு மனிதநேய முதல்வர் **'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்**

**வாடினேன்**' எனும் வள்ளலாரின் கருணை உள்ளத்தோடு வள்ளலார் நகரில்,

கடந்த **14.03.2024** அன்று வடசென்னையின் வளர்ச்சிக்காக **11** துறைகளை ஒருங்கிணைத்து **219** திட்டப் பணிகளுக்கு ரூபாய் **4,181** கோடி நிதியினை ஒதுக்கி உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவிற்கு இணங்க, ரூபாய் **1,524** கோடி நிதியினை சென்னைப் பெருநகர்

வளர்ச்சிக் குழுமம் பங்களிப்பு செய்து திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**வளர்ச்சி என்பது**

**வசதியானவர்களுக்கே**

**வாய்ப்பு தருவது அல்ல!**

**வாய்ப்பு கிடைக்காதவர்களுக்கும்**

**வசதி செய்து தருவது!**

**என்பதே**

**எங்கள் திராவிட**

**ஆட்சியின் சமூகப்புரட்சி!**

மாண்புமிகு முதல்வரின் கருணை உள்ளத்தால் இனி **வடசென்னையும் வாடாத சென்னையாக** மணம் வீசும்.

## 4. பேருந்து முனையங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

மாநகரம், நகரம், கிராமங்கள் என அனைத்துத் தரப்பு மக்களின் அன்றாட வாழ்வில் அவசியத் தேவையாகின்றன பேருந்துகள். அந்த வாகனங்கள் நகர்ந்தால்தான் மக்களின் வாழ்க்கையே நகரும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையின் நான்கு திசைகளிலும் புதிய பேருந்து நிலையங்களை உருவாக்கி மக்களின் சிரமங்களை வெகுவாக குறைக்க அனைத்து

நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

சமீபத்திய சாதனையாக 'இது பேருந்து நிலையமா' 'விமான நிலையமா' என்று வியந்து பார்க்கின்ற வகையில் கிளாம்பாக்கத்தில் அதிநவீன வசதிகளுடன் சுமார் ரூபாய் 400 கோடி செலவில் கட்டப்பட்ட **கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை** 30.12.2023 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

வியப்பைப் போலவே ஒரு சிலர் விமர்சனங்களையும் முன்வைத்தார்கள். நேரம் ஆகிறது என்றார்கள். தூரம் ஆகிறது என்றார்கள். ஆனால் அத்தனை விமர்சனங்களையும் எதிர்கொண்டு சிறுசிறு குறைகள் யாவையையும் சீர்செய்து பயணிகள் மனதார பாராட்டுகிற வகையில் பேருந்து முனையத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தவர் எங்கள் முதல்வர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இப்பேருந்து முனையப் பணிகள் சரியான திட்டமிடல் இல்லாமல் தொடங்கப்பட்டது. இந்த அரசு

பொறுப்பேற்ற பின்னர் முறையாக திட்டமிட்டு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய கூடுதலாக சுமார் ரூபாய் 210 கோடி ஒதுக்கீடு செய்து பல திட்டப் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு நிறைவேற்றி வருகிறோம்.

*எங்கள் முதல்வர்*
*முடியாது என்று*
*முற்றுப்புள்ளி வைப்பவர் அல்ல!*
*முடியாததையும் முடித்துக் காட்டி*
*வெற்றிப்புள்ளி பெறுபவர்!*
*ஆண்டுகள் மூன்று*
*எங்கள் சாதனைகளே சான்று!*

மேலும், குத்தம்பாக்கத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 427 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேருந்து முனையம் **அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள்** மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

- செங்கல்பட்டில் ரூபாய் 97 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து முனையம்.
- மாமல்லபுரத்தில் சுமார் ரூபாய் 90 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து முனையம்.
- முடிச்சூரில் ஆம்னி பேருந்துகளுக்காக ரூபாய் 42.70 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிறுத்துமிடம் ஆகிய பணிகள் மக்கள் வசதிக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இம்முனையங்கள்**

**பயணிகளுக்கு எளிதாகின்றன**

**பயணங்களுக்கு இனிதாகின்றன**

**இதனால்**

**நிகழ்கால நெரிசல் மறையும்**

**வருங்கால நெரிசல் குறையும்**

## 5. அறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

*எங்கள் முதல்வரின் ஆட்சி*

*காகிதத்தில் மட்டுமே*

*சாதிக்கிற ஆட்சி அல்ல*

*காரியத்தில் சாதிக்கிற ஆட்சி*

*வெள்ளம் ஏற்பட்டபோது*

*ஆறுதலும் நிதியும்*

*தர மறுத்தவர்கள்*

*தேர்தல் ஆதாயம் தேடி*

*தமிழ்நாட்டைச் சுற்றிசுற்றி வந்தபோதும்*

*மக்களின் கோப வெள்ளத்தில்*

*அடித்துச் செல்லப்பட்டார்கள்.*

*ஆனால்,*

*எங்கள் முதல்வரை மக்கள்*

*வெற்றி மழையில் நனைய வைத்தார்கள்.*

*எங்கள் தலைவர்*

*சென்னையில்* **Road show** *நடத்துகிற*

*தலைவர் அல்ல!*

*மாநகர சென்னையின்*

*மாபெரும் வளர்ச்சிக்கு*

*வித்திடுகிற தலைவர்!*

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின் படி சென்னை மாநகரத்தின் 26 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 4 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை பெற்று புதிய திட்டப் பணிகளை உருவாக்கி வருகிறோம்.

கடந்த ஆண்டு 50 திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. கடந்த 3 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட 69 திட்டங்களில் 14 திட்டங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டன.

தடைக்கற்களையும் படிக்கற்களாக மாற்றி ஏனைய திட்டங்களும் முழுமையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வரின் வழிகாட்டுதலோடு சென்னைப் பெருநகரத்தின் அசுர வளர்ச்சியிலும் அசராமல் பணியாற்றி வரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் இந்த ஆண்டு ரூபாய் 390 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 46 அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றோம்.

நேரமின்மை காரணமாக 11 அறிவிப்புகளை மட்டும் இங்கு வாசிக்கின்றேன். மீதமுள்ள அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வாசித்ததாகக் கருதி பதிவு செய்து கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1. சென்னைப் பெருநகர் பகுதியில், 10 பொது நூலகங்கள், மின்–வழி கற்றல் மையங்களாக ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

2. சென்னைப் பெருநகர் பகுதியில், கைவண்ணம் சதுக்கம் (சென்னை அங்காடி) ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

3. மெரினா கலங்கரை விளக்கம் முதல் தீவுத்திடல் வரை மெரினா பாரம்பரிய வழித்தடம் (**Marina Heritage Corridor**) ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

4. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு, மழைநீர் வடிகால் கால்வாய் சீரமைத்தல் போன்ற கட்டமைப்புப் பணிகள் ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. சென்னைப் பெருநகர் பகுதியில் மூன்று படிப்பு மற்றும் பகிர்ந்த பணியிட மையங்கள் (Co–Working Space) ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

6. சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள சேத்துப்பட்டு பசுமை பூங்கா ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

7. சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள 10 சுரங்கப்பாதைகள் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

8. சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள முக்கிய போக்குவரத்து சிக்னல்கள் சூரிய சக்தியில் இயங்கும்

வகையிலும், சாலை சந்திப்புகள் மக்கள் பயன்பாட்டிற்காக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

9. சென்னைப் பெருநகர் பகுதியில் 11 சமுதாய கூடங்கள் ரூபாய் 77 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10. சென்னைப் பெருநகர் பகுதியில் 6 பேருந்து நிலையங்கள் ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

11. போரூர் மற்றும் பெருங்குடி ஏரிகள் உட்பட 5 நீர்நிலைகள் ரூபாய் 33 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

# நிறைவுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

எங்கள் முதல்வர் அன்று

மாநகரத் தந்தையாக இருந்து

சிங்காரச் சென்னையை

உருவாக்கினார்கள்.

இன்று

மாநிலத் தந்தையாக உயர்ந்து

பிரம்மாண்ட சென்னையை

உருவாக்க

நினைத்திருக்கிறார்கள்.

*இதிகாச காலத்தில்*

*புதுப்புது நகரங்களை நிர்மாணித்தான்*

*மயன்!*

*விஜயநகரம் என்னும்*

*வெற்றி நகரத்தை நிர்மாணித்தார்கள்*

*ஹரிகரர், புக்கர்!*

*தொன்மைச் சிறப்பு மிக்க*

*சென்னை மாநகரத்தை*

*தொலைநோக்குச் சிந்தனையோடு*

*நிர்மாணிக்கிறார்*

*நம் முதல்வர்*

*எங்கள் முதல்வர்*

*திட்டங்களை*

*திறம்பட தீட்டுகிறவர் – அதில்*

*நுட்பங்களை*

*கொண்டு வந்து கூட்டுகிறவர்*

*எதையும் பொதுநலத்தோடு பார்ப்பது*

*எப்போதும் உழைத்து வேர்ப்பது*

*எந்த ஒரு தியாகத்தையும் ஏற்பது*

*என்பதால் தானே கிடைத்தது*

*நாற்பதுக்கு நாற்பது*

ஒரு தக்கை தான் மட்டுமே கரையேறும்,

ஒரு பறவை தான் மட்டுமே

உச்சிக்குச் செல்லும்,

அவ்வாறு அல்லாமல்

எங்கள் மாண்புமிகு முதல்வர்,

தன்னோடு வந்தவர்களையும்

கரை சேர்க்கும் தோணி.

சகலரையும் சேர்த்து உயர்த்தும்

சமத்துவ ஞானி.

நேற்றின் பெருமை

கலைஞர்

நமக்கு உரமாக வாய்த்தது...

இன்றின் பெருமை

மாண்புமிகு முதல்வர்

தரமாக வாய்த்தது...

நாளையின் பெருமை

நம் சின்னவர்

நமக்கு

வரமாக வாய்த்தது...

காய்ந்து கிடக்கிற நிலத்தில்

பாய்ந்து வருகிற நதி!

திசையெல்லாம் ஒளி வீசும்

திராவிடத்தின் மதி!

ஓய்ந்து போகாமல்

உரக்க ஒலிக்கின்ற சுதி!

அவர் தான்

ஓய்வே அறியாத எங்கள் உதயநிதி!

இவர்களின் லட்சியங்களுக்கு வடிவம் கொடுக்கவும், எண்ணங்களுக்கு வண்ணங்கள் கொடுக்கவும் அல்லும் பகலும் அயராது உழைப்போம்.

***மாநகரம் என்பது***

***எல்லா வசதிகளும் கிடைப்பது மட்டுமல்ல!***

***எல்லோருக்கும் வசதிகள் கிடைப்பது!***

எனும் குறிக்கோளுடன் சென்னைப் பெருநகரத்தை உருவாக்கும் மாண்புமிகு முதல்வருக்கு துணை நிற்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**

இந்த மானியக் கோரிக்கையை தயாரிக்க எனக்கு முழு உதவியாக இருந்த தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்–I திரு.முருகானந்தம் அவர்களுக்கும், நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.த.உதயச்சந்திரன் அவர்களுக்கும், இத்துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் மருத்துவர்

பி.உமாநாத் அவர்களுக்கும், முனைவர் எம்.எஸ்.சண்முகம் அவர்களுக்கும், திருமதி அனுஜார்ஜ் அவர்களுக்கும், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா அவர்களுக்கும், முதன்மைச் செயல் அலுவலர் திருமதி.காயத்ரி கிருஷ்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு.தினேஷ் அவர்களுக்கும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டு,

இம்மானியக் கோரிக்கையில் 9 உறுப்பினர்கள் ஒரே பொருளின் மீது வெட்டுத்தீர்மானங்களை அளித்திருக்கிறார்கள்.

சென்னைப் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட கிளாம்பாக்கம் பேருந்து முனையம் மக்களின் பயன்பாட்டிற்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்பேருந்து முனையத்திலிருந்து தற்போது தினசரி 2390 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. வார நாட்களில் நாளொன்றுக்கு சராசரியாக 50,000 பயணிகளும், வார இறுதி நாட்களில் நாளொன்றுக்கு சராசரியாக 75,000 பயணிகளும் மற்றும் விழாக் காலங்களில் நாளொன்றுக்கு சராசரியாக ஒரு

இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகளும் இப்பேருந்து முனையத்தினை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் பேருந்து முனையத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தும் விதமாகவும், பயணிகளுக்கு இனிமையான பயண அனுபவத்தை வழங்கும் விதமாகவும் பல்வேறு கூடுதல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆகவே, இப்பேருந்து முனையத்தினை மீண்டும் கோயம்பேட்டிற்கு மாற்றுவதற்கான தேவை எழவில்லை.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத்தீர்மானத்தை திரும்பபெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

நன்றி! வணக்கம்!